விலை: 40.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : 16 viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 130 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 15 வியாழக்கிழமை (28.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### தென்பகுதி போராட்டத்துக்கு தமிழர்களின் கோசம்

# ‘உங்களைப் புரிந்து கொள்கின்றோம் எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்’

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)
தென்பகுதியில் நடக்கின்ற போராட்டம் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தெரியப்படுத்தும் அறிக்கையொன்றை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்று வெளியிட்டுள்ளது.

“உங்களைப் புரிந்து கொள்கின்றோம். எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்” என்ற கோசத்தை மகுடவாசகமாகக் கொண்டு தமிழர்களின் நியாயப்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் 15

# நாடு இன்று ஸ்தம்பிக்கும்

- அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ‘பொது வேலைநிறுத்தம்’
- ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஆதரவு



(கொழும்பு)
அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இன்று பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

இதனால் நாடு இன்று முழுமையாக ஸ்தம்பிதம் அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### இ.போ.ச பேருந்துகள்
## வழமைபோல சேவையில் ஈடுபடும்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று போராட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், 15

## பதவி விலகுமாறு ஜனாதிபதி கோரவில்லை
### அவ்வாறு கோரவும் மாட்டார் போட்டுடைத்த மகிந்த

(கொழும்பு)
என்னைப் பதவி விலகுமாறு அரச தலைவர் ஒருபோதும் கோரவில்லை, அவ்வாறானதொரு கோரிக்கையை அவர் விடுக்கவும் மாட்டார் என 02

## தொடர்ச்சியாக கேம் விளையாடிய இளைஞன்
### மனவிரக்தியில் விபரீத முடிவெடுத்ததில் மரணம்

(யாழ்ப்பாணம்)
தொலைபேசியில் தொடர்ச்சியாக வீடியோ கேம் விளையாடி வந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவன் விரக்தியில் விபரீத முடிவெடுத்ததில் உயிரி 15

## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அமெரிக்கத் தூதுவர் விஜயம்




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை 15

## ஆசிரியர்களுக்கு நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)
தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்ற ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் காலை 9 மணிக்கு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-7)



## அடம்பிடிக்காமல் கௌரவமாக வெளியேறுங்கள்

பிரதமரிடம் ரதன தேரர் 03

## வங்கிகளும் இன்று வேலைநிறுத்த போராட்டம்

(கொழும்பு)
இலங்கை வங்கி ஊழியர்சங்கம் மற்றும் 15

## இடைக்கால அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்
### சஜித்திடம் தேரர்கள் கோரிக்கை

(கொழும்பு)
சர்வகட்சி இடைக்கால அரசு அமைப்பதற்கு வெளியில் இருந்தாவது ஒத்துழைப்பு வழங்குமாறு முக்கியமான தேரர்கள் சிலர், எதிர்க் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை நிறுத்த போராட்டத்திற்கு த.தே.கூட்டமைப்பு ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினை பதவி விலகக் கோரி இன்றையதினம் இடம்பெறவுள்ள நாடுதழுவிய ரீதியிலான ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவளிப்பதாக அக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில், இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினை பதவி விலகக் கோரி தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டத்திற்கு தமது ஒத்துழைப்பை வழங்கும் முகமாக இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்கள் நாடுதழுவிய ரீதியிலான ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தினை முன்னெடுக்கவுள்ளனர்.

இதற்கு ஆதரவினை தெரிவித்தும் அரசுக்கு தொடர்ச்சியான அழுத்தத்தினை வழங்கும் முகமாகவும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளுமாறு அனைத்து தொழிற்சங்கங்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேண்டி நிற்கின்றது என்றுள்ளது. (ம-7)

## இடைக்கால அரசு அமைக்க ஜனாதிபதி கோட்டா இணக்கம்

### சர்வகட்சி கூட்டத்துக்கும் அழைப்பு



(கொழும்பு)

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும் வகையில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சர்வகட்சிகளையும் இணைத்து இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் என்ற வகையில் கொள்கை அடிப்படையில் இணக்கப்பாட்டை தெரிவிப்பதாக கோட்டாபய ராஜபக்ச கட்சித் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலகியவுடன் சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் முழுமையான இணக்கத்தை கட்சித் தலைவர்களுக்கு கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார். (ம-7)

## நாட்டை பாதிப்பிற்குள்ளாக்க இடமளிக்க முடியாது

### மகாசங்கத்தினரிடம் மகிந்த



(கொழும்பு)

நாட்டை பாதிப்பிற்குள்ளாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படும் தீர்மானங்களுடன் ஒன்றிணைந்து செயற்பட தயார் என பிரதமர் மகிந்த ராஜபக்ச மகா சங்கத்தினரிடம் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நடப்பு விவகாரம் தொடர்பில் மகாசங்கத்தினரது நிலைப்பாட்டை ஓமல்பே சோபித தேரர் இதன்போது தெளிவுப்படுத்தினார். இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பிலும் இதன்போது மகாசங்கத்தினர் தெளிவுப்படுத்தினர்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் அது தொடர்பில் மகாநாயக்க தேரர்கள், மத தலைவர்கள் உட்பட சகல அரசியல் கட்சி தலைவர்களின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மகாசங்கத்தினரிடம் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார நிலைமையை இயல்பான நிலைக்கு கொண்டுசெல்ல வேண்டுமாயின் அரசியல் ஸ்திரத்தன்மை உறுதியான தன்மையில் பேணப்பட வேண்டும்.

ஆகவே எக்காரணிகளுக்காவும் நாட்டை பாதிப்பிற்குள்ளாக்க இடமளிக்க முடியாது என பிரதமர் மகிந்த ராஜபக்ச மகா சங்கத்தினரிடம் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரயில்வே ஊழியர்களும் வேலை நிறுத்த போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த அடையாள வேலை நிறுத்தத்தை இன்று நள்ளிரவு வரை தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம், லோகோமோட்டிவ் ஆப்பரேட்டிங் இன்ஜினியர் யூனியன், ரயில்வே ஊழியர் சங்கம், ரயில் தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் உள்ளிட்ட 30இற்கும் மேற்பட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ம-7)

## பதவி விலகு...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று அலரி மாளிகையில் பிரதேச சபைத் தவிசாளர்கள், நகர சபைத் தலைவர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சந்திப்பின் போது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகக்கூடாது என உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 08 - 1965



இறப்பு 27 - 04 - 2022

### இலக்கணகுமார் குகிலாதேவி

( கிரிசா )

கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலக்கணகுமார் குகிலாதேவி (கிரிசா) அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணகிரிநாதர் - அன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் இலக்கணகுமார் அவர்களின் அன்பு மனைவியும் பிரதீபா (கனடா), தனேஸ்குமார் (ஜேர்மனி), சாந்தரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும் தாமரைமனாளன், நிஷாந்தன் (கண்ணா) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஷால், செயோன், சபானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மணிமகுனன், ஜெயகௌரி (ஜேர்மனி), வக்சலா, உதயசந்திரன், வசந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் முறைமையில் கற்பித்தல் மேற்கொள்ளும் பாடசாலைக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன. தகுதி உடையவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

- பிள்ளைகளை பராமரிப்பதற்கும் பாடசாலை சுத்திகரிப்பதற்கும் தகுதியானவர்கள் தேவை.
- வகுப்பறை உதவியாளரும் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். ( AMI method)

(C-4252)

தொடர்புகளுக்கு
நிர்வாகி
154, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

Tel.no. : 077 244 4172
021 222 6242
E.mail:
sat37aero@gmail.com


## அஞ்சலிக் கூட்டம்

மறைந்த தகைசார் பேராசிரியர் திருமதி **இராஜேஸ்வரி மகேஸ்வரன்** அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அஞ்சலிக் கூட்டம் இரசாயனவியல் துறை, யாழ். பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**விபரங்கள் கீழ்வருமாறு**

திகதி : 29.04.2022 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பிற்பகல் 03.30 மணி
இடம் : இரசாயனவியல் துறை விரிவுரை மண்டபம், விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

மறைந்த பேராசிரியருடன் அன்பு கொண்ட அனைவரையும் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந் நிகழ்வினை Zoom இல் நிகழ்நிலையாக பார்வையிடலாம்.
Meeting Id - 62472857975
Password - CM29@chem

தகவல் :
இரசாயனவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(11188)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடம் பிடிக்காமல் கௌரவமாக வெளியேறுங்கள்

## பிரதமரிடம் ரத்ன தேரர் கோரிக்கை



(கொழும்பு)


**"பதவி விலகமாட்டேன் என அடம்பிடிக்காமல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கௌரவமாக வெளியேற வேண்டும்" என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

11 கட்சிகளின் கூட்டணிக்கும், சுயாதீன அணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே ரத்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு நலன் கருதி, பதவி விலகும் முடிவை பிரதமர் எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-6)



## தொடரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று புதன்கிழமை 19 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இந்தப் போராட்டத்தில் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்து மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கோட்டா கோ கம என பெயரிடப்பட்டுள்ள பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மக்கள் போராட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதனிடையே, மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கையின் மற்றுமொரு கட்டத்தை அலரி மாளிகைக்கு முன்பாக மைனா கோகம என்ற பெயரில் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)






விவசாயத்திற்கான உரம், மருந்தினை தடையின்றி வழங்குமாறு கோரியும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரியும் நுவரெலியாவில் விவசாயத் திணைக்கள ஊழியர்கள், விவசாயிகள் இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அரச நிறுவனங்களுக்கான செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான விசேட சுற்றறிக்கை நிதி அமைச்சின் செயலாளரினால் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

### ஜனநாயகத்தை சீரழித்த

# ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றாக பதவி விலக வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து



(கொழும்பு)

வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரே தடவையில் உடனடியாகப் பதவி விலக வேண்டும்."

ஒருவரை மட்டும் பதவி விலகக்கோரும் சுயலாப அரசியல் கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபயவும் மஹிந்தவும் பதவி விலக வேண்டும் எனக் கோரியே ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் அலரி மாளிகைக்கு முன்பாகவும் இரவு பகலாக மக்கள் போராடி வருகின்றனர்.

மக்கள் ஆணையின் பிரகாரம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியும் பிரதமரும் மக்களின் இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும்.

காலம் தாழ்த்தாது கௌரவமாக இருவரும் பதவி விலகி புதிய ஆட்சிக்கு வழிவிட வேண்டும். பிரதமர் மஹிந்தவை மட்டும் பதவி விலக்கி ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இடைக்கால அரசு அமைந்தால் அதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மக்கள் போராட்டங்கள்தான் மேலும் வீரியம் பெறும்.

பொதுஜன பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் இரட்டை வேடத்தில் இருப்பதால் பாராளுமன்றத்தில் பிரேரணைகள் மூலம் அரசையும் ராஜபக்ஷக்களையும் கவிழ்ப்பது எந்தளவுக்குச் சாத்தியம் என்று இப்போது சொல்ல முடியாது.

எனினும், பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு வந்தால் ஆளும் - எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் உண்மை முகங்களை அறிந்துகொள்ள முடியும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

### மூன்று மாதங்களுக்கு

## நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அனைத்து நிர்மாணப் பணிகளையும் இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி பொது மக்களிடம் கோரிக்கையை விடுத்தார்.

உற்பத்திகள் விற்பனை செய்யப்படாத நிலை ஏற்படும் போது, இறக்குமதியாளர்கள் விலையை குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராஜஸ்தான் வெற்றி; புள்ளி பட்டியலில் முதலிடம்

றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிராக புனே மகாராஷ்டிரா கிரிக்கெட் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற ஐ.பி.எல் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 29 ஓட்டங்களால் வெற்றியீட்டி அணிகள் நிலையில் 12 புள்ளிகளுடன் முதலாம் இடத்தை அடைந்துள்ளது.

ரியான் பரக்கின் சிறப்பான துடுப்பாட்டம், குல்தீப் சென் மற்றும் ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோரின் திறமையான பந்துவீச்சுகள் என்பன ராஜஸ்தான் றோயல்ஸை வெற்றி அடையச் செய்தன.

பெங்களூர் சார்பாக ஜொஷ் ஹேஸல்வுட், வனிந்து ஹசரங்க டி சில்வா, மொஹமத் சிராஜ் ஆகியோர் கட்டுப்பாட்டுடன் பந்து வீசிய போதிலும் துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்காததால் அவ்வணி தோல்வியைத் தழுவியது.

அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.



ஜொஸ் பட்லர் 8, தேவ்தத் படிக்கல் 7, ரவிச்ச ந்திரன் அஷ்வின் 17, அணித் தலைவர் சஞ்சு செம் சன் 27, டெரில் மிச்செல் 16 ஆகிய ஐவர் ஆட்ட மிழக்க 15ஆவது ஓவரில் ராஜஸ்தானின் மொத்த எண்ணிக்கை 99 ஓட்டங்களாக இருந்தது.

ஆனால், ரியான் பரக், தனி ஒருவராக போராடி 31 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸ்கள், 3 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்று ராஜஸ்தான் றோயல்ஸ் சுமாரான மொத்த எண்ணிக்கையை பெற உதவினார்.

மத்திய மற்றும் பின்வரிசையில் வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெறவில்லை.

பந்துவீச்சில் ஜொஷ் ஹேஸல்வுட் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வனிந்து ஹசரங்க டி சில்வா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மொஹமத் சிராஜ் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் 19.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வி அடைந்தது.

ஆரம்ப வீரராக மீண்டும் களம் புகுந்த விராத் கோஹ்லி சாதிப்பார் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை அணிக்கு தாக்கத்தைக் கொடுத்தது.



அதன் பின்னர் விக்கெட்கள் சீரான இடைவெளியில் சரிந்த வண்ணம் இருந்தன.

அணித் தலைவர் பவ் டுப்ளெசிஸ் 23, ரஜாத் பட்டிதார் 16, ஷர்பாஸ் அஹ்மத் 17, வனிந்து ஹசரங்க டி சில்வா 18 ஆகிய நால்வரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.


க்ளென் மெக்ஸ்வெல் 0, தினேஷ் கார்த்திக் 6 ஆகிய இருவரும் மீண்டும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

பந்துவீச்சில் குல்தீப் சென் 3.3 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ரவிச்சந்திரன் அஷ்வின் 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ப்ராசித் க்ரிஷ்ணா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2603

### சாமந்தி

சம்மர் சோதனைகள்
யார்றா நீ என்ன அப்பான்னு கூப்பிடுறா?



அப்பா நான் தான் காலைல கிரிக்கெட் விளையாடப்போன உன் புள்ளை நேசமணி...

### ராஜா




பேச ஆரம்பிக்கும் போது பேசு பேசு பேசிக்காட்டுனு உசுற வாங்க வேண்டியது.

நல்லா பேச்சு வந்ததும் லொடலொடனு பேசாத வாய மூடுனு சொல்றது.
என்ன பாத்தா எப்டி இருக்கு எல்லார்க்கும்?

### றோஜா

உலகத்திலே மிக பெரிய ஞாபக மறதி



வெள்ளிக்கிழமை பேக்ல வச்ச டிபன் பாக்சை திங்கட்கிழமை காலையில எடுக்கிறது தான்...

### ருக்ஷானி


சட்டைல இருந்த முந்நூறு ரூபாய காணோம் எடுத்துட்டுப் போயிட்டான்... அந்த தருதல...




ஏதொ தெரியாத்தனமா எடுத்துட்டேன் அதுக்காக கொஞ்சம்... விட்ட இராணுவம் வச்சு தேடுவாரு போல...

### அபிநயன்

ஒளி மயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது...



நமக்கு எந்த ஆங்கிள்ள பாத்தாலும் ஒன்னும் தெரிய மாட்டேங்குதே...

### தினேஷ்

நல்லவேளை மண்டை ஓடு நல்ல ஸ்டாராங்கா இருக்கு...




இல்லைனா அடிக்கிற வெயிலுக்கு மூளை உருகி மூக்கு வழியா வந்திருக்கும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி அலரி மாளிகைக்கு எதிரில் உணவு தவிர்ப்பு போராட்டம்



(கொழும்பு) இலங்கையில் அரசாங்கத்தினால் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பெற்றுக்கொடுக்குமாறு கோரி கொழும்பு கொள்ளுப்பிட்டிய அலரி மாளிகைக்கு எதிரில் உணவு தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அலரி மாளிகைக்கு எதிரில் இளைஞர்கள் சிலர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்,

பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கவே நாங்கள் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்தார். (நி-6)


யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் 2022

இடம்- பாடசாலை மண்டபம்

காலம் : 15.05.2022 காலை 10.00 மணி

பதிவு செய்த பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : 13.05.2022 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை பாடசாலையில் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்கும் பழைய மாணவர்களே கூட்டத்தில் பங்கேற்க முடியும்.

அதிபர்

(C-4251)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் . திருமதி.

**மீனலோசனி சிவலிங்கம் (சந்திரா)**

திதி 28.04.2022

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27.07.1953 | 09.05.2021 |

கடந்த 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர்.திருமதி.**மீனலோசனி சிவலிங்கம் (சந்திரா)** அவர்களின் முதலாம் வருட ஆத்மசாந்திப் பிரார்த்தனை 28.04.2022 இன்று வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில். 021 205 2752 குடும்பத்தினர்.

(11184)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி.சிவராஜினி சிறிதரன் அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர்.திருமதி.

**தர்மலிங்கம் கனகம்மா**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(C-4253)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.இரத்தினம் பெகின் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் திரு.

**திரவியம் இரத்தினம்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07.10.1943 | 23.03.2022 |

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(C-4254)

## இராசிபலன்

28.04.2022
சித்திரை 15, வியாழக்கிழமை
திரியோதசி பின்னிரவு 1.42 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 6.58 மணிவரை
சுபநேரம் 7.28 - 8.58 மணிவரை
இராகுகாலம் 1.28 -2.58 மணிவரை
பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்- ஆயிலியம், மகம்
வள்ளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியத் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** உறவினர்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்டநாள் விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உடல்நலன் சீராகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**துலாம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஒளிமயமான எதிர்காலம் அமையத் திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், அனுபவம் மிக்கவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும் நாள்.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** பொருளாதார நலன் கருதிய வெளியூர்ப் பயணங்கள் இடம்பெறலாம். நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

சிறிய உதவிகளை மறக்காதே ஆனால் சிறிய தவறுகளை மறந்துவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாற்றத்திற்கான பாதை திட்டம்'
# இரண்டாம் சுற்று பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாற்றத்திற்கான பாதை திட்டத்தில் முன்பள்ளி மாண வர்களின் திறன் விருத்தி யுடன் நடத்தை மாற்றங்கள் சாதகமாக அமையப் பெற வேண்டும் என்ற நோக்கு டன் முதற் சுற்று பயற்சிகள் முடிவடைந்து, இரண்டாம் சுற்று பயிற்சிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற் றுப் பணிப்பாளர் எஸ்.சேது ராஜா தெரிவித்தார்.

மாற்றத்திற்கான பாதை திட்டம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கை யில், மாற்றத்திற்கான பாதை திட்டமானது யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவி யுடன் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து சொண்ட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது கிளி நொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 44 பாடசா லைகள், 20 சிறுவர் இல் லங்கள் மற்றும் 30 சிறுவர் கழகங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இது கொங்கொங் நாட் டில் பொலிடெக்னிக் பல்க லைக்கழகத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு பாடத் திட்டம் ஆகும். இது வளரி ளம் பருவத்தினருக்கு சிறப் பாக வடிவமைக்கப்பட்டு கொங்கொங் நாட்டிலே பாரிய வெற்றியடைந்த ஒரு திட்டம் ஆகும். இதனை எங்கள் நாட்டின் கலாசாரத் திற்குகேற்ப மாற்றியமைத்து வளரிளம் பருவத்தினரிற்கு மாற்றத்திற்கான பாதை திட்டம் என்ற கருப்பொரு ளில் 8 அத்தியாயங்கள், 20 அலகுகள் 7000 மாணவர் களுக்கு வெற்றிகரமாக ஆசி ரியர்களால் வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் ஏராளமான மாற்றங்கள் அதிபர், ஆசிரியர்கள், மாண வர்கள், மற்றும் சமூகத்தி னரால் அடையாளம் காணப் பட்டு அறிக்கையாக்கி வைக் கப்பட்டுள்ளது. இதில் குறிப் பிடத்தக்க மாற்றமாக மாண வர்கள் பெற்றோர்கள் ஆசிரி யர்களுக்கு மதிப்பளித்தல், பாடசாலைகளுக்கு நேரத் திற்கு சமூகம் அளித்தல், வரிசையாக பாடங்களுக்கு செல்லுதல், சீராக சீருடை களை அணிந்து வருதல், பாடவேளையில் குழப்பம் மேற்கொண்ட மாணவர் கள் இப்பயிற்சியின் பின் அமைதியாக இருத்தல், பாடசாலைக்கு ஒழுங்காக சமூகமளித்தல், மாணவர் களுக்கு ஏற்படுகின்ற சவால் களை எவ்வாறு இலகுவாக வெற்றி கொள்ளமுடியும். போன்றவை ஆசிரியர்க ளால் அறிக்கையிடப்பட் டுள்ளது.

இத்தகைய நடத்தை மாற் றங்கள் நல்ல ஒரு சமுதா யத்தை உருவாக்கும். என் பதிலும் நடைபெறுகின்ற வன்முறைகள், இளம் வயது தற்கொலைகள், பாட சாலை இடைவிலகல், போதை வஸ்து பாவனை போன் றவை இடம்பெறாது, பொறுப் புமிக்க இளம் சமுதாயம் உருவாக்குவதில் இத்திட் டம் பங்காற்றுகிறது.

இத்திட்டம் முடிவுறும் நிலையில் உள்ளது. இதனை சகல பாடசாலை களிலும் செயற்படுத்தி சமூகம் முழுவதும் பயனு றும் வகையில் ஒழுங் கமைப்பது அனைவரதும் கடமையாகும் எனத் தெரி வித்தார். (4-6-33)




சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லுண்டாய் கடற்கரையோரப் பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை கடல்சார் சுற்றுச்சூழல் அதிகார சபையினரால் 350 கண்டல் தாவரங்கள் நாட்டப்பட்டன.

(படம்: ரவிசாந்)



பிரான்ஸ் பொபிக்னி நகரசபையின் முதல்வருக்கும் யாழ்.மாநகர சபை முதல்வருக்குமான கலந்துரையாடல் ஒன்று கடந்த 25 ஆம் திகதி பொபிக்னி நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழர்கள் தங்களுடைய நீண்ட கால அரசியல் அபிலாசைகள் மற்றும் பொபிக்னி நகரசபையுடன் இணைந்து யாழ்.மாநகரசபை எவ்வாறு பணியாற்றலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)



ஜே/68 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தொடர்மாடி அருகாமையில் நீண்டகாலமாக புனரமைப்பின்றி காணப்பட்ட வீதி நேற்று முன்தினம் யாழ்.பிரதேச செயலரின் அனுசரணையுடன் மண்தரை வீதியாக மாற்றப்பட்டது.

(படம்: ஏனெஸ்ட்)

# எரிவாயு தட்டுப்பாட்டால் வவுனியாவில்
# வெதுப்பகங்கள் சில பூட்டு

(குருமன்காடு)

வவுனியாவில் இயங்கி வருகின்ற வெதுப்பகங் கள் சில எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக மூடப்பட்டுள் ளதுடன் இதனால் பல தொழிலாளர் கள் வேலை வாய்ப்புக்களை இழந்துள் ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயுத் தட்டுப்பாடு கார ணமாக வவுனியா நகரின் குட்செட் வீதி மற்றும் பட்டா னிச்சூர் ஆகிய பகுதிக ளில் இயங்கி வருகின்ற இரண்டு வெதுப்பகங்கள் நேற்று முதல் மூடப்பட்டுள் ளது.

எரிவாயுத் தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக அரசாங் கத்தினால் தெரிவிக்கப்படு கின்ற போதும் எரிவாயு விநியோக நிலையங்களில் தட்டுப்பாடு நிலவி வருகின் றது . இதனால் மக்களால் எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அத்துடன் எரிவாயுத் தட்டுப்பாட்டினால் வெதுப் பகங்களை மூட வேண்டிய நிலை உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்க ப்படுகின்றது. (4-8-250)

# யாழ்.பொது நூலகத்திற்கு
# அமெரிக்க தூதுவர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூல கத்திற்கு இலங்கைக்கான அமெ ரிக்கத்தூதுவர் ஜூலிசுங் நேற்று விஜயம் மேற்கொண்டார். பொது நூலகத்திற்கு விஜயம் மேற் கொண்ட தூதுவரை யாழ். மாந கரசபை பிரதி முதல்வர் துரை [illegible] இ.த. ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொண்டார். (4-6-33)




யுத்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துவதற்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் இடம்பெற்றது.

(படம்: ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால்

# ஊட்டச்சத்து குறைபாடுள்ள சமூகம் உருவாகும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வாழ்க்கைச் செலவுகள் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து போசாக்குக் குறைபாடுள்ள சமூகம் உருவாகுவதை தவிர்க்க முடியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முழு மருத்துவமனை அமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையே நோயாளிகள் கிளினிக்குகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் மருத்துவமனைகளில் பாரிய அளவில் மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்குவதில் பெற்றோர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் நாளாந்த சம்பளம் பெறுபவர்கள் பண வீக்கத்துடன் வாழ்வது கடினமாகிவிட்டது.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி அரசியலில் இருந்து விலகி தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

இதற்கான நிலையான வேலைத்திட்டத்தை அரசாங்கமும் சட்டசபையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

### காக்கைகள் சிறுமைப்படுத்தப்படுவது முடிவுக்கு வரட்டும்

(கொழும்பு)

சிலரால் காக்கைகள் சிறுமைப்படுத்தப்படுவதாகவும் அந்தக் காலம் விரைவில் முடிவுக்கு வரட்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று சர்வதேச காக்கைகள் தினமாகும் இதனையடுத்து காக்கைகள் நினைவு தினம் குறித்து தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (நி-6)

### ரூபாவின் பெறுமதி கடும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இதன்படி அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் நேற்று அமெரிக்க டொலர் ஒன்று 355 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 333.88 ரூபாவாக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா:47 ½ சூரி 10 செவ் 1 இல்<br>உயரம் :6'2"<br>தகைமை/தொழில்: கணனி System Administrate(U.S.A)<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் தீவகம் வலி வடக்கு வேண்டாம்<br>தொ.இ: B/12545 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 25 சூரி 7 செவ்3இல் உயரம்:150 cm<br>தகைமை/தொழில்:BSc Civil & Construction Engineer நிரந்தர தனியார்<br>எதிர்பார்ப்பு: Engineer வெளிநாடு Australia Newzeland Canada America<br>தொ.இ: G/9422 |
| பிறப்பு: 1990இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:சூரி 10 செவ் 6 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்:A /L Computer Shop<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் தீவகம் வலி வடக்கு வேண்டாம்<br>தொ.இ: B/12546 | பிறப்பு:1990இந்து நட்சத்திரம்:அவிட்டம் 3<br>கி.பா:40 ½சூரி 6 செவ் 3 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரிMBA Reading அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் GSதவிர்ந்த ஏனைய அரசதொழில் சைவம் விரும்பதக்கது அசைவம் எனிலும் ஏற்கப்படும்<br>தொ.இ:G/9426 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா:7சூரி 2 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்:O/L தோட்டம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12549 | பிறப்பு:1989இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா:51 ½சூரி செவ்10 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L , HND in Accounting எதிர்பார்ப்பு :அரசதொழில் வெளிநாடு: UKமட்டும் தொ.இ:G/9436 |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: சூரி 12 செவ் 4 இல் உயரம்:5'<br>தகைமை/தொழில்:O/L தச்சு வேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12550 | பிறப்பு: 1997கிறிஸ்தவம் NRC<br>தகைமை/தொழில்: பட்டதாரி கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: படித்த நல்ல உத்தியோகமுள்ள மணமகன் கிறிஸ்தவம் NRC முக்கியம்<br>தொ.இ: G/9446 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## மருதானை புனித ஜோசப் கல்லூரி கட்டடத்தில் தீ பரவல்



(கொழும்பு)

மருதானை புனித ஜோசப் கல்லூரியில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று தீ பரவல் ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. (நி)

## சிற்றுண்டிகளின் விலை மீண்டும் அதிகரிக்கும்

(கொழும்பு)

சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அமைய, சிற்றுண்வகங்களில் விலை அதிகரிப்பை மேற்கொள்வது குறித்த தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அதன் உரிமையாளர்களுக்கே வழங்குவதாக சிற்றுணவக உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டமையால் தேநீர், பால் தேநீர், உணவுப்பொதி, அப்பம், பராட்டா, கொத்து உட்பட சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிக்கும் என கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோது அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டால், சிற்றுணவக தொழிற்துறை வீழ்ச்சியடையும். இது ஒரு பாரிய பிரச்சினையாகும் என அவர் சுட்டிக்காட்டினார். (நி)

## கப்பல் கட்டணங்களை டொலரில் செலுத்துமாறு பணிப்பு

(கொழும்பு)

அனைத்து கப்பல் கட்டணங்களையும் டொலரில் செலுத்துமாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் துறைமுக அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமெரிக்க டொலர்களில் செலுத்தப்பட வேண்டுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக அதிகாரசபையின் வருடாந்த வருமானம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டும் எனவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 31

# பெற்றோர்கள் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது பாசம்



ஒரு சிறுவன் தினமும் வந்து ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஆடிப்பாடி விளையாடி விட்டு போவான்.
அவனை பார்த்தாலே அந்த மரத்துக்கு ஆனந்தம் பொங்கும்.
திடீரென்று ஒரு நாள் அந்த சிறுவன் வரவில்லை.
மரமும் அவனை எதிர்பார்த்து காத்தி ருந்தது. சில நாள் கழித்து அந்த சிறுவன் வந்தான். அந்த மரம் சந்தோஷத்துடன் அவனை் பார்த்து ஏன் இவ்வளவு நாள் வரவில்லை? உனக்கு என்ன பிரச்சனை என்று கேட்டது?
என் நண்பர்கள் எல்லோரும் அழகழகாய் பொம்மைகள் வைத்திருக்கிறார்கள், ஆனால் என்னிடம் மட்டும் ஒன்றும் இல்லை. என்றான்.
கவலைப்படாதே இந்த மரத்தில் உள்ள பழங்களை எடுத்துச்சென்று கடையில் விற்று பொம்மை வாங்கிக்கொள்.
என்னை பார்க்க அடிக்கடி வந்து கொண்டிரு என்றது...
அவனும் மகிழ்ச்சியுடன் பழங்களை பறித்து சென்றான்.
மறுபடியும் அவன் வரவில்லை. மரம் அவனுக்காக ஏங்கியது. பல வருடம் கழித்து ஒரு நாள் வந்தான். அவன் முகத்தில் கவலை தெரிந்தது, இப்போது அவன் வளர்ந்திருந்தான். அவனை பார்த்ததும் மரத்துக்கு ஏக சந்தோஷம். வா என்னிடம் வந்து விளையாடு இந்த கிளையில் ஏறி அமர்ந்து பாட்டு பாடு என்றது.
அதற்கு அவன் இல்லை இப்போது வயதாகி விட்டது எனக்கு மனைவி குழந்தைகள் உள்ளனர்.
ஆனால் நாங்கள் வசிக்க சொந்தமாக நல்ல வீடு இல்லை. வீடு வாங்க என்னிடம் பணமில்லை,.....
மரம் உடனே சொன்னது பரவாயில்லை உனக்கு கொடுக்க என்னிடம் பணமில்லை அதற்கு பதில் என்னுடைய கிளைகளை வெட்டி எடுத்துச்செல் அதில் ஒரு வீடு கட்டிக்கொள் என்றது.
அவனும் கோடாரியால் கிளைகளை வெட்டத் தொடங்கினான். இப்படி ஒரேயடியாக என்னை பார்க்காமல் இருக்காதே முடிந்த வரை வருடம் ஒரு முறையாவது வந்து பார்த்து செல் என்றது.
வேண்டிய கிளைகள்ள வெட்டி எடுத்துச்சென்றான். அதற்கு பின் பல வருடங்கள் வரவில்லை.
அவன் வருவான் வருவான் என்று மரமும் நித்தமும் காத்திருந்தது. பல வருடங்கள் கழித்து பார்க்க வந்தான்.
மரம் அவனை பார்த்து ஆனந்த கூத்தாடியது.
அவன் எப்போதும் போல் சோகமாக இருந்தான். ஏன் இப்படி இருக்கிறாய் என்று மரம் கேட்டது. என் மீன் பிடி படகு உளுத்து விட்டது. படகு இல்லாததால் மீன் பிடிக்க முடியவில்லை, அதனால் வருமானம் இல்லை நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம் என்றான்.
மரம் துடித்து போய், நான் இருக்கிறேன். என்னுடைய அடி மரத்தை வெட்டி எடுத்துக்கொள், இதை வைத்து நீ பெரிய படகு கட்டிக்கொள் என்றது.
அவன் அடி மரத்தை வெட்டும் போது, மறக்காதே வருடத்திற்கு ஒரு முறை என்றில்லாமல் எப்போதாவது என்னை, பார்க்க வா என்றது.
ஆனால் அவன் வரவேயில்லை. மரத்துக்கு நம்பிக்கை மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தது.
அப்போது அவன் வந்தான். தலையெல்லாம் நரைத்து கூன் விழுந்து மிகவும் வயதான தோற்றத்துடன் அவன் இருந்தான்.
அவனை பார்த்து மரத்துக்கு அழுகையே வந்து விட்டது.
இப்போது உனக்கு கொடுக்க என்னிடம் பழங்கள் இல்லை.. கிளைகள் இல்லை.. அடி மரமும் இல்லை.. உனக்கு கொடுக்க என்னிடம் ஒன்றுமே இல்லையே என வருந்தியது.
அவன் சொன்னான் நீ பழங்கள் கொடுத்தாலும் அதை கடிக்க எனக்கு பற்கள் இல்லை, வீடு கட்டவும் படகு செய்யவும் என்னிடம் சக்தி இல்லை. எனக்கு இப்போது ஓய்வு மட்டுமே தேவைப்படுகிறது என்றான்.
அப்படியா இதோ தரையில் கிடக்கும் என் வேர்களில் படுத்துக்கொள் என்றது. அவனும் அந்த வேர்களில் தலை வைத்து படுத்துக்கொண்டான். இந்த சுகத்துக்குதான் அந்த மரம் பல வருடங்கள் ஏங்கி தவித்தது. இப்போது அந்த ஏக்கம் நிறைவேறியது. அந்த மரம் ஆனந்த கண்ணீர் விட்டது.
இது மரத்தின் கதையல்ல நிஜமான நம் பெற்றோர்களின் கதை; இந்த சிறுவனை போல் நாமும் சிறு வயதில் தாய் தந்தையோடு விளையாடுகின்றோம் வளர்ந்து பெரியவனானதும் தமக்கென்று குடும்பம், குழந்தை என்று ஒதுங்கி விடுகின்றோம். அதன் பின் ஏதாவது தேவை அல்லது பிரச்சனை என்றால் தான் அவர்களை தேடி போகின்றோம். நம்மிடம் இருப்பவை எல்லாம் அவர்கள் கொடுத்தது என்பதை புரிந்து கொள்ளுங்கள். நம்மால் அவர்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது. நம்முடைய பாசம், அன்பு, நேரம் தவிர. அவர்கள் விரும்புவதும் அதுதான்..

# ஆங் சாங் சூகிக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனை



(மியன்மார்)

இராணுவத்தால் ஆளப்படும் மியன்மார் நாட்டின் முன்னாள் தலைவர் ஆங் சாங் சூகி ஊழல் வழக்கில் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மியன்மாரில் கடந்த 2021 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இராணுவத்தால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டதிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்சாங் சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

76 வயதான நோபல் பரிசு பெற்ற ஆங்சாங் சூகி மீது வாக்காளர் மோசடி உள்ளிட்ட குற்றவியல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளதோடு, மனித உரிமைக் குழுக்கள் நீதிமன்ற விசாரணைகளை போலித் தனமானது என கண்டித்துள்ளன.

வழக்கு விசாரணை மியன்மார் தலைநகரில் பொது மக்களுக்கும் ஊடகங்களுக்கும் கதவுகள் மூடப்பட்ட நிலையில் நடத்தப்பட்டுள்ளது. மேலும் ஆங்சாங் சூகியின் வழக்கறிஞர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசுவதைத் தடை செய்துள்ளனர்.

மியன்மாரின் மிகப்பெரிய நகரம் மற்றும் பிராந்தியமான யாங்கூனின் முன்னாள் தலைவரிடமிருந்து பணம் மற்றும் தங்கக் கட்டிகள் வடிவில் 600,000 அமெரிக்க டொலர் வாங்கியதற்காக அவர் குற்றவாளி என நேற்று புதன் கிழமை இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில், அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய தண்டனை அவரது மொத்த சிறைத் தண்டனை 11 ஆண்டுகளாகிறது. ஏனெனில் அவர் முன்பு மற்ற குற்றங்களுக்காக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி-6)

2

5

தற்போ
கட்டுப்ப
ர்ந்தால்,
ஆண்டி
பேரழிவ
என்றும்
ஏற்பட்ட
ழிவுகள்
என்றும்
விக்கப்ப
வெ
தொற்று
இரசாய
போன்ற
ஏற்படக்
தெரிவி
மாற்றம்
பான அ
அதன்

# தஞ்சாவூரில் தேரோட்டத் மின்சாரம் தாக்கி 11 பேர்

(சென்னை)

தமிழகம் - தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆலய தேர்த் திருவிழாவின் போது மின்சாரம் தாக்கியதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

தஞ்சாவூர் அருகே களிமேடு பகுதியில் அப்பர் குருபூஜை 94 ஆம் ஆண்டு விழா நேற்று முன்தினம் இரவு வெகு விமர்சையாக நடைபெற்றது.

அப்போது, தேரை அப்பகுதி மக்கள் வடம் பிடித்து இழுத்து வந்த நிலையில் அங்கு மேலே சென்ற உயர் அழுத்த மின்சார கம்பியின்

# சீனாவில் ‘எச்3 என்8’ பறவை மனிதர்களுக்கு ப

(பீஜிங்)

சீனாவில் காய்ச்சல் உள்ளிட்ட பல அறிகுறிகள் காணப்பட்ட 4 வயது சிறுவனுக்கு பறவை காய்ச்சல் நோய் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. சீனாவின் ஹெனான் மாகாணத்தில் முதல் முறையாக பறவை காய்ச்சல் மனிதருக்கு பரவி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

பறவை காய்ச்சலின் ‘எச்3 என்8’ திரிபு முதல் மனித நோய்த்தொற்றை பதிவு செய்துள்ளதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகள் மற்றும் காகங்கள் மூலம் பறவை காய்ச்சல் மனிதர்களுக்கு பரவி இருக்கும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# 2030 இற்குள் ஒவ்வொரு ஆண்டும் 560 பேரழிவுகளை சந்திக்க நேரிடும்


## ஐ.நா அறிக்கை

(ஜெனீவா)

**காலநிலை மாற்றம் தடுக்கப்படாமல் போனால் 2030 இற்குள் மனிதர்கள் ஒவ்வொரு ஆண்டும் 560 பேரழிவுகளை சந்திக்க நேரிடும் என்று ஐ.நா அறிக்கை வெளியிட்டுள்ளது.**

தற்போதைய போக்குகள் கட்டுப்படுத்தப்படாமல் தொடர்ந்தால், உலகம் 2030 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 560 பேரழிவுகளைச் சந்திக்கும் என்றும், 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்டதை விட 400 பேரழிவுகள் அதிகமாக ஏற்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மட்டுமல்லாது தொற்றுநோய்கள் அல்லது இரசாயன விபத்துக்கள் போன்ற பிற ஆபத்துகளும் ஏற்படக்கூடும் என்று ஐ.நா தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றம் காலநிலை தொடர்பான ஆபத்துகளின் அளவு, அதன் கால அளவு மற்றும்



தீவிரத்தன்மையை அதிகரிக்கிறது. காலநிலையில் ஏற்பட்ட முதற்கட்ட மாற்றத்தால் 1970 முதல் 2000 வரை, உலகம் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆண்டுக்கு 90 முதல் 100 நடுத்தர முதல் பெரிய அளவிலான பேரழிவுகள் ஏற்பட்டன.

2001 ஆம் ஆண்டை விட 2030 இல் கடுமையான வெப்ப அலைகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் 30 சதவீதம் அதிக வறட்சி ஏற்படும் என்றும் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இதற்கிடையில், இது இயற்கை பேரழிவுகள் பற்றி மட்டும் பேசவில்லை, ஆனால் காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட கொவிட்-19, பொருளாதார சரிவுகள் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகிய வற்றையும் ஐ.நா தனது அறிக்கையில் விளக்கியுள்ளது.

இயற்கை பேரழிவுகள் அதிகம் உள்ள பகுதிகளில் பெருகிவரும் மக்கள் தொகையால் பேரழிவுகளின் தாக்கமும் அதிகரித்துள்ளது என்று அறிக்கை கூறுகிறது. 1990 இல், பேரழிவுகளால் உலகிற்கு ஆண்டுக்கு $70 பில்லியன் இழப்பு ஏற்பட்டது. ஆசியா-பசுபிக் பகுதி அதிக சேதத்தை சந்திக்கிறது. ஆண்டுதோறும் பேரழிவுகளால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 1.6 சதவீதத்தை இழக்க கப்படுகிறமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-6)

## ..டத்தின்போது ..ர் பரிதாப பலி

மீது தேர் உரசியதில் தேரின் மீது மின்சாரம் பாய்ந்தது.

இதன்போது தேரை வடம்பிடித்து இழுத்தவர்களை மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர். (நி-6)


## ..றவை காய்ச்சல் .. பரவியது

தெரிவித்துள்ளனர். சிறுவனுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த யாருக்கும் வைரஸ் பாதிப்பு ஏற்படவில்லை.

ஏற்கனவே சீனாவின் வுகான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு பரவி உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கராச்சி பல்கலையில் சீனர்களை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்

### 4 பேர் பலி, 4 பேர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் - கராச்சி பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தற்கொலை குண்டுதாரி ஒருவர் சக்திவாய்ந்த குண்டை வெடிக்கச் செய்ததில் மூன்று சீன மொழி ஆசிரியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியர் உட்பட நான்கு பேர் பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

கராச்சி பல்கலைக்கழகத்தில் சீன மொழி பயிற்றுவிக்கும் கன்பூசியஸ் நிறுவனக் கட்டடத்தின் அருகே நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடிக்கச் செய்யப்பட்டதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

கடந்த ஆண்டு, வடக்கு பாகிஸ்தானில் பயணிகள் பேருந்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஒன்பது சீனர்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டதற்குப் பின்னர் பாகிஸ்தானில் சீன மக்களுக்கு எதிராக இடம்பெற்ற மற்றொரு தாக்குதல் சம்பவமாக இது பதிவாகியுள்ளது. (நி-6)

## ரஷ்யா- உக்ரைன் பேச்சுவார்த்தை

# சாதகமான பதிலை தரும் புடின் நம்பிக்கை வெளியீடு

(மொஸ்கோ)

உக்ரைனுடனான பேச்சுவார்த்தை சாதகமான பலனைத் தரும் என தான் நம்புவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீதான ரஷ்யப் போர், உலகளவில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் புடினின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இதேவேளை, உக்ரைன் மீதான மொஸ்கோ படையெடுப்பின் ஆரம்பக் கட்டத்தில் செர்னோபில் அணுமின் நிலையத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றி, உலகை "பேரழிவின் விளிம்பிற்கு" தள்ளியது என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

மேற்கத்தேய நட்பு நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு கீவ் நம்பியிருக்கும் போக்குவரத்து உட்கட்டமைப்பை ரஷ்யா குறிவைப்பதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

உக்ரைனை தொடர்ந்து ஆதரித்தால், மால்டோவாவுக்கு என்ன நடக்கும் என்பதை ரஷ்யா காட்ட முயற்சி செய்து வருவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

· டான்பாஸில் உள்ள சிறிய நகரமான டோரெட்ஸ்கில் உள்ள பொதுமக்கள் உயிர் வாழ போராடி வருகிறார்கள் என்றும், போரினை அவர்கள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று விரும்புவதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட காணி பயன்பாட்டுக்குழு கூட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வருடத்திற்கான முதலாவது மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில்இடம்பெற்றது. பிரதேச ரீதியாக பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மாவட்ட திட்டமிடல் குழுவில் அங்கீகரிப்பதன் ஊடாக அச்செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி,கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சிபாரிசு செய்யப்பட்ட காணிக்கோரிக்கை விடயங்கள்.அவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டதோடு அக்கோரிக்கைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு காணிகளுக்குரிய அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பூரணமான ஆவணங்கள் இல்லாத காணிகளுக்குரிய கோரிக்கைகள் அடுத்த மாவட்ட மட்ட காணிபயன்பாட்டுக்குழுக் கூட்டத்தின் போது சிபாரிசிற்காக எடுத்துக் கொள்வதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (4-6-315)

# ஸார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்து முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் ஆகிய பகுதியிலும் கிளிநொச்சி முகமாலை மற்றும் ஆனையிறவு ஆகிய பகுதிகளிலும் கடந்த ஆறு வருடங்களில் இருபது இலட்சத்து ஐம்பத்தொராயிரத்து எண்பது சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து முப்பத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்துமூன்று அபாயகரமான வெடிபொருட்களை இதுவரை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.



மனிதாபி மான கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# வவுனியாவில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. குருமன்காடு, யாழ்வீதி, இறம்பைக்குளம், கோவில் குளம் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களில் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்தினம் இறம்பைக் குளத்தில் தனிமையில் இருந்த வயோதிப பெண்ணிடம் கத்தியை காட்டி பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதே வேளை கோவில் குளத்திலும் பெண்ணொருவரிடம் தங்கச் சங்கிலியை திருடர்கள் அறுத்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-6-299)

# அரசாங்கத்திற்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்



(முறிகண்டி)

கிளிநொச்சியில் அரசுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். குறித்த போராட்டம் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-100-316)

# குளங்களில் படரும் தாவரங்களால் விவசாயச் செய்கை பாதிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தின் குளங்களில் தற்போது பரவி வருகின்ற ஒருவிதமான தாவரம் காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருகின்றது. குளத்தின் நீர் ஏந்து பகுதிகளில் இத்தாவரமானது படர்ந்து காணப்படுவதனால், குளங்களில் உள்ள நீரின் கொள்ளளவு குறைவதுடன், இந்தக் குளத்திலிருந்து நீர்ப்பாசனம் செய்யப்படுகின்ற வயல் நிலங்களும் பாதிப்படைந்துள்ளது. விவசாய நிலங்களுக்கு இந்தக் குளத்தின் நீரை பாய்ச்சுகின்ற போது இத்தாவரம் நெற்பயிர்ச்செய்கை செய்கின்ற வயல் நிலங்களுக்கும் சென்று, அங்குள்ள நெற்பயிர்களையும் பாதிப்படையச் செய்கின்றது. அத்தோடு பயிர்களுடைய வளர்ச்சியை கட்டுப்படுத்துவதோடு, விளைச்சலையும் குன்றச் செய்வதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் இப்பிரச்சினை பல குளங்களில் ஏற்படுவதோடு, இத்தாவரமானது பரவலடைவது அதிகரித்து வருவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது. நீர்ப்பாசனத் திணைக்களம் அல்லது உரிய அதிகாரிகள் இதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுகின்றனர். (4-6-299)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றினால் நாளை மறுதினம் 30 ஆம் திகதி பகிரங்க மணல் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது. ஏலவிற்பனை செய்யப்படவுள்ள மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பங்குபற்ற வருவோர் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய வருமாறு நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 340 | 400 | 360 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 120 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 250 |
| தக்காளி | 280 | 350 | 280 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 130 | 140 | 120 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 160 | 200 | 180 |
| பூசணி | 80 | 70 | 70 | 80 |
| புடோல் | 200 | 150 | 150 | 160 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 120-280 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டைக்காய் | 200 | 160 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 130 | 180 |
| பயற்றங்காய் | 180 | 250 | 240 | 150 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 150 |
| பீற்றூட் | 160 | 140 | 160 | 200 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 360 | 450 |
| கத்தரிதம்புள்ள | 320 | 350 | .-- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 120 | 140 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 180 | 200 | 180 |
| வெங்காயப்பூ | - | -- | -- | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 240 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | -- | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்



(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: தோ, ந, நி, நே, நோ, ய, யி, யு உள்ளவர்களுக்கும்

**விருச்சிக இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு செல்வ வளம் பெருக வைக்கப்போகிறது. பொருளாதார முன்னேற்றமும், புதிய முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். குருவின் பரிபூரண பாரவை உங்கள் இராசியில் பதியும்விதம் இந்த ஆண்டு தொடங்குவதால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமையும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். நண்பர்களின் நட்பால் இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் செவ்வாய், சுக்கிரனோடு இணைந்து 'சுக்கிர மங்கள யோகத்தை' உருவாக்குகிறார். சூரியன் புதனுடன் இணைந்து 'புத ஆதித்ய யோகம்' ஏற்படுகிறது.

செவ்வாயை சந்திரன் பார்ப்பதால் 'சந்திர மங்கள யோகம்' செயற்படுகிறது. குருவிற்கு 6 ஆம் இடத்தில் சந்திரன் இருப்பதால் 'சகட யோகமும்' உண்டாகிறது. குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் தனது சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார்கள்.

மேலும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்ச ரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசியில் பதிகிறது. எனவே வருமானம் உயரும்.

வெற்றிகள் ஸ்தானத்தில் சனி பலம்பெற்று வீற்றிருப்பதால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். சுற்றமும், நட்பும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கை அமையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் வந்து சேரும்.

எதிரிகள் உதிரி களாவர். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். உடன்பிறப்புகளும், உடன் இருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். தொழில் சூடுபிடிக்கும்.

சுக ஸ்தானத்தில் சுக்கிரன், செவ்வாய் சேர்க்கை பெற்றிருக்கின்றன. 'சுக்கிர மங்கள யோகத்தின்' பல

# வெற்றி வாய்ப்புக்கள் வீடு தேடி வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

னால், இல்லத்தில் மங்கல ஓசை, மழலையின் ஓசை கேட்க வழிபிறக்கும். குரு பார்வை பதியும் நேரத்தில் நீங்கள் செய்யும் பரிகாரங்கள் உடனடியாகப் பலன் கொடுக்கும். எனவே சுய ஜாதகத்தை ஒரு முறை புரட்டிப் பார்த்து. அதில் பாக்கிய ஸ்தானத்திற்குரிய கிரக அடிப்படையில் தெய்வத்தை தேர்ந்தெடுத்து, யோகபலம் பெற்ற நாளில் அதற்குரிய ஆலயம்சென்று வழிபட்டு வந்தால் தடைகள் தானாக விலகும்.

ஆறாம் இடத்தில் சூரியனோடு புதன் இணைந்து 'புத ஆதித்ய யோகம்' உருவாவதால், அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புது முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். 6 இல் ராகு இருப்பதால் 'அஷ்ட லட்சுமி யோக' அடிப்படையில் பொருளாதாரத்தில் உயர்வும், பொன் -பொருள் சேர்க்கையும் ஏற்படும். எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் உச்சம் பெற்றிருப்பதால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும்.

ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசியைப் பார்ப்பதால் வசதி வாய்ப்புகள் பெருகும். வாகன யோகம் வந்துசேரும். வீடு வாங்குவது அல்லது வீடு கட்டுவது போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல்இலாபம்கிடைக்கும்.

பூர்வீகச் சொத்துக்களை பங்கிட்டுக் கொள்ளும் முயற்சி பலன்தரும். பார்க்கும் குருவைப் பலப்படுத்த குரு பீடங்களுக்குச் சென்று வழிபட்டு வாருங்கள்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசியிலும், 9,11 ஆகிய இடங்களிலும் பதிகிறது.

எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன. உடல் ஆரோக்கியம் சீராகும். கூட்டு முயற்சியில் இருந்து விலகித் தனித்து இயங்கும் ஆற்றல் பிறக்கும். உற்றார், உறவினர்களும் நண்பர்களும் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். தந்தை வழி ஆதரவு கிடைக்கும். தனவரவு திருப்தியாக இருக்கும்.

சகோதர வர்க்கத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீக வீட்டைப் பழுது பார்த்து புதிய அமைப்பில் கட்டும்




முயற்சியில் ஈடுபடுவீர்கள். முன்னோர்கள் செய்த தர்ம காரியங்களை தொடர்ந்து செய்ய வாய்ப்பு உருவாகும்.

தொழிலை விரிவுபடுத்தி கிளைத்தொழில் தொடங்க முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் தானாகவே கிடைக்கும்.

**சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10. 2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். சனியின் வக்கிர காலத்தில் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லுங்கள். விரயங்கள் அதிகரிக்கும்.

அதை சுபவிரயமாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனம். 29.3.2023 இல் கும்ப இராசிக்குச் சனி செல்கிறார். இதனால் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் உருவாகிறது. எனவே இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றமும் செய்ய முன்வருவீர்கள். சனி சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. சனி பகவான் வழிபாட்டால் தொல்லைகளில் இருந்து விடுபட இயலும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

புத்தாண்டில் புகழும், பொருளும், குவிய சதுர்த்தியன்று விரதமிருந்து ஆனைமுகப்பெருமானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் உங்களுக்கு தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை கூடும். செல்வ நிலை உயரும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும்.

குரு பார்வையால் பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறப் போகின்றது. உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இதுவரை பரிசீலனையில் இருந்த பதவி வாய்ப்பு இப்பொழுது கிடைக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# பேசும் கிளி





(நேற்றைய தொடர்ச்சி)

வேலப்பனும் அதற்குச் சம்மதித்து இருநூறு ரூபாய் கொடுத்து ராமப்பன் கிளியை எடுத்துச் சென்றான். ஆனால் மூன்று நாட்கள் கழிந்ததும் அவன் அக்கிளியோடு ராமப்பன் வீட்டிற்குப் போய் "இந்தக் கிளிக்கு நேற்று முதல் என்ன ஆயிற்றோ தெரியவில்லை! முட்டாள், கழுதை, முண்டம், தடி மாடு என்ற வார்த்தைகளைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்தா! நீயே இதை வைத்துக் கொள். இது எனக்கு வேண்டாம், என் பணத்தைத் திருப்பிக் கொடு" என்றான். ராமப்பனோ "எனக்கு வேண்டாம். அன்று விற்கும் போதே திரும்ப வாங்கிக் கொள்ளமாட்டேன் என்று சொன்னேனே. உனக்கு வேண்டாம் என்றால் அதை எங்காவது கொண்டு போய்விடு" என்று கூறினான்.

வேலப்பனுக்குக் கோபம் வந்து "ஒழிந்து போ" என்று கிளியைப் பறக்கவிட்டுப் போய்விட்டான். கிளி பறந்து போயிற்று. சற்று நேரத்திற்குப் பின் ராமப்பன் மனைவி ஓடி வந்து "கிளி நம் வீட்டுக்கே வந்து விட்டது. ஆனால் முன் போல் நல்ல வார்த்தைகள் பேசாமல் கண்டபடி வசை மாரி பொழிகிறதே" என்று கூறினாள்.

ராமப்பனும் சிரித்தவாறே "கவலைப் படாதே. அது இன்னமும் சற்று நேரத்தில் நல்ல வார்த்தைகளாகச் சொல்லப் போகிறது பார். அதற்கு வாரத்திற்கு ஒரு முறை பாதாம் பருப்பு கொடுக்க வேண்டும்.

அப்படிக் கொடுக்காவிட்டால் அது கண்டபடி திட்ட ஆரம்பித்து விடும். இந்த விடயத்தை அந்த மலைவாசி என்னிடம் சொல்லி இருந்தான். ஆனால் நான் அதை வேலப்பனிடம் சொல்லவில்லை. அதனால்தான் அது குறித்த நாளில் பாதாம் பருப்பு கிடைக்காததால் திட்ட ஆரம்பித்தது.

நான் அதற்கு பாதாம் பருப்பைக் கொடுக்கிறேன். அதைச் சாப்பிட்டுவிட்டு நல்ல வார்த்தைகளாக அது மறுபடியும் சொல்லும் பார்" என்று கூறி பாதாம் பருப்பைக் கொடுத்தான். கிளியும் அதைத் தின்ற பின் முன் போல் நல்ல வார்த்தைகளைக் கூறலாயிற்று.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




"நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டான். இலக்குவன் நடந்ததைச் சொன்னான்; தான் அங்கு வரவில்லை என்றால் சீதை நெருப்பில் விழுந்து இறந்திருப்பாள் என்பதை விளக்கினான்.

இலக்குவன் தடுத்தும் தான் மான் பின் சென்றது தவறு என்பதை இராமன் ஒப்புக் கொண்டு அதற்காக வருந்தினான். விரைவில் பர்ணசாலை திரும்புதல் வேண்டும் என்று கூறி இருவரும் வேகமாக நடந்தனர். பர்ணசாலையை அடைந்தனர். பஞ்சவடியில் சீதையைக் காணவில்லை. தேடி வைத்த செல்வம் வைத்த இடத்தில் இல்லாவிட்டால் எத்தகைய துன்பம் அடைவார்களோ அத்தகைய துன்பத்தை இராமன் அடைந்தான். அவன் மனம் சுழன்றது. உலகமே சுழன்று திரிவதைப்போல அவனுக்குக் காணப்பட்டது.

அவன் கோபத்தால் கண்கள் சிவந்தன. தருமத்தின் மீதும், சீதையைக் காக்காத தேவர்களின் மீதும் அவன் கோபம் பாய்ந்தது.

தேரினுடைய சக்கரங்கள் பூமியில் பதிந்து இருப்பதைப் பார்த்தார்கள். சீதையைத் தொடுவதற்கு அஞ்சி அவள் இருந்த நிலத்தை அடியோடு பெயர்த்துக் கொண்டு போனதையும் அறிந்தார்கள். "சீதையைக் கவர்ந்தவன் வெகுதூரம் செல்வதற்கு முன்பு அவனைத் தொடர்ந்து செல்வோம்" என்று இராமன் கூறினான். தேர்ச் சுவடுகள் வழிச் சென்றனர். ஓர் இடத்தில் அச்சுவடுகள் நின்று விட்டன. அவன் ஆகாய வழியே சென்றிருக்க வேண்டும் என்பதை அறிந்தனர்.

அம்பு தாக்க முடியாத தூரத்திற்குச் சென்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். இரண்டு யோசனை தூரம் நடந்து சென்றனர். வீணையின் சித்திரம் வரையப் பெற்ற துகில் கொடி ஒன்று நிலத்தின் மீது கிடப்பதைக் கண்டனர். அந்தக் கொடி சடாயுவின் மூக்கால் தான் அறுபட்டு இருக்க வேண்டும் என்று உணர்ந்தனர். மேலும் தொடர்ந்து சென்றனர். வலிமையான ஒரு வில்லைக் கண்டனர். இதுவும் சடாயுவால் கடிக்கப்பட்டிருக்கிறது என்று முடிவு செய்தனர். பெரிய சூலம் ஒன்றையும் அம்பறாத் துணிகள் இரண்டையும் கண்டனர்.

இராவணன் மார்பிலிருந்து சடாயு பறித்த கவசம் சிதைந்து கிடந்ததைக் கண்டனர். குதிரைகள் விழுந்து கிடந்ததையும் தேர்ப் பாகன் மடிந்து கிடந்ததையும் கண்டனர். தோளில் அணியும் ஆபரணங்களையும் கவச குண்டலங்களையும் மணிகள் பதித்த மகுடங்களையும் கண்டனர். சடாயுவுடன் போரிட்டவன் சிங்கம் போன்ற ஆற்றல் பெற்றவனாக இருக்க வேண்டும் என்று கணித்தனர்.

கடலில் மத்தாக வைக்கப்பட்ட மந்தர மலையைப் போல இரத்த வெள்ளத்தில் இராமன் சடாயுவைப் பார்த்தான; அவன் மீது இராமன் விழுந்து கதறி அழுதான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்பகுதி சிங்கள மக்களின் ஒற்றுமை கண்டும் ஒன்றுபடோமோ!

அன்பார்ந்த தமிழ் மக்களே! ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் எதிராகச் சிங்கள மக்கள் நடத்துகின்ற போராட்டம் எத்துணை தூரம் வியாபித்துள்ளதென்பதை நாம் அறிய முடியும்.

இதற்கெல்லாம் மூலகாரணம் சிங்களப் புத்திஜீவிகளின் வழிப்படுத்தலாகும்.

ஆம், தென்பகுதியில் இருக்கக்கூடிய சிங்களப் புத்திஜீவிகள் ஒன்றுகூடி சிங்கள மக்களை வழிப்படுத்துகின்றனர்.

அவர்களின் வழிப்படுத்தலுக்குக் கட்டுப்பட்டு தென்பகுதியில் இருக்கக்கூடிய அத்தனை அமைப்புகளும் ஓரணியில் திரண்டுள்ளன.

அதிலும் பல்கலைக்கழக சமூகம், சட்டத்தரணிகள், பௌத்த பீடங்கள், தொழிற்சங்கங்கள் என அனைத்தும் ஒன்றுபட்டு ஓரணியில் செயலாற்றுகின்றன எனும்போது, சிங்களப் புத்திஜீவிகள் எத்துணை தூரம் சாதாரண மக்களுடன் உறவைப் பேணுகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து விரட்டுவதற்கான சிங்கள மக்களின் போராட்டம் எந்தச் சலனமும் இன்றி நீண்டு செல்கிறதெனும்போது, அதன்பின்னணியில் இருக்கக்கூடிய சிங்கள சிவில் அமைப்புகளின் இயங்குதிறனின் உன்னதம் தெரிகிறதல்லவா!

இதைப் பார்க்கும்போதுதான் நாம் எங்கு நிற்கின்றோம். எம் இனம் தொடர்பில் எங்கள் சமகால இளைஞர்கள், மாணவர்களின் புரிதல் எவ்வாறாக உள்ளது என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விகளோடு, எம் இளம் சமூகத்தை இனப்பற்றோடு வழிநடத்துவதில் எமது புத்திஜீவிகளின் வகிபங்கு எவ்வாறாக இருக்கிறது என்பதையெல்லாம் நினைத்துப் பார்க்கையில் இதயம் விக்கித்துக் கொள்கிறது.

ஆம், தென்பகுதியில் எழுகை பெற்றுள்ள மக்கள் போராட்டத்தின் இலக்கு, ஆட்சிப் பீடத்திலுள்ள கோட்டாபய ராஜபக்ஷ தரப்பை வீட்டுக்கு அனுப்புவது மட்டுமல்ல, மாறாக இந்த நாட்டின் அரசியல் கட்டமைப்பை மாற்றுவதும் சிங்கள இளைஞர்களை எழுச்சியும் ஆற்றலும் கொண்ட இளம் சமூகமாக மாற்றுவதும் அதற்குள் உள்ளடங்கும்.

எனவே அன்புக்குரிய தமிழ் மக்களே! தியாகம் நிறைந்த எங்கள் தமிழ்த் தேசத்தின் உறவுகளே! எங்கள் பலம் எங்களின் ஒற்றுமை என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

எங்களின் எதிர்காலம் ஆற்றல்மிக்க எங்கள் இளைஞர்களின் உருவாக்கம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த உணர்வோடு இனத்தின் பேரால் ஒன்று கூடுவோம். சூழ்நிலைக்கேற்ப ஒருமித்து முடிவெடுப்போம்.

மண்ணெண்ணெய்க்காக

## 6 மணிநேரம் வரிசையில் காத்திருந்தவர் வீடு திரும்பி மரணம்

ஹட்டனில் சுமார் 6 மணித்தியாலங்களுக்கு மேல் வரிசையில் காத்திருந்து, மண்ணெண்ணெய் பெற்று வீடு திரும்பிய வர்த்தகர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஹட்டன் - தும்புறுகிரிய வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தேவநாயகம் கிருஸ்ணசாமி (வயது-55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த வர்த்தகர் ஹட்டன் நகரில் வாடகை கட்டடமொன்றில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நிரப்பு நிலையத்துக்கு சென்ற அவர், வரிசையில் நின்று மண்ணெண்ணெய்யைப் பெற்று இரவு 11 மணியளவில் வீடு திரும்பியதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

பின்னர் தனக்கு அதிகம் சோர்வாக இருப்பதாக கூறிய குறித்த நபர் வாந்தி எடுத்த பிறகு, நித்திரைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை அவர் நித்திரையிலேயே உயிரிழந்துள்ளதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தனது கணவருக்கு எவ்வித பாரதூரமான நோய்களும் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ள உயிரிழந்தவரின் மனைவி, மண்ணெண்ணெய் பெறுவதற்காக பல மணி நேரம் வரிசையில் காத்திருந்தமையாலேயே தனது கணவர் மரணித்தார் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நெல்லியடி இலங்கை வங்கி, கார்கில்ஸ்-நெல்லியடி, ரூபின்ஸ் மருத்துவமனை, பிரதேச செயலகம்-கரணவாய்,எச்.என்.பி - நெல்லியடி, கரணவாய், மத்தோனி, முடக்காடு, நாவலர்மடம், நெல்லியடி-பருத்தித்துறை வீதி, நெல்லியடி, மருதம், நெல்லியடி - கொடிகாமம் வீதி, திருமகள் சோதி வீதி, தூதாவளை, விக்னேஸ்வரா கரவெட்டி, கே.எம்.கே கடல் உணவு (பிரைவேட்) லிமிட்டட், சுழிபுரம், கள்ளவேம்படி, மூழாய், பத்தானைக் கேணியடி தொல்புரம், சத்தியக்காடு, தொல்புரம் வளக்கம்பறை அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 3 நாட்களுக்கான மின்துண்டிப்பு விபரம்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று நாட்களுக்கு மூன்றரை மணித்தியாலங்களுக்கு மின்துண்டிப்பை மேற்கொள்ள இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய A,B,C, D,E,F,G,H,I,J,K,L,P,Q,R, S,T,U,V,W ஆகிய வலயங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுழற்சி முறையில் 2 மணித்தியாலங்களும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை சுழற்சி முறையில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு அமுலாகவுள்ளது.

அவ்வாறே, கொழும்பு முன்னுரிமை வலயங்களில் (CC) காலை 6 மணி முதல் 9 மணி வரை 3 மணித்தியாலங்களும் மின்துண்டிப்பு இடம்பெறுமென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

## பொருளாதார நெருக்கடியை கண்டித்து வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம் சுகவீன விடுப்புப் போராட்டம்


(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை கண்டித்து வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம் இன்று தொழிற்சங்க சுகவீன விடுப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேற்படி விடயம் தொடர்பாக எமது தாய்ச் சங்கமான "அரசு சேவை தொழில்நுட்ப அதிகாரிகள் (சிவில்/ எலக்ட்ரிகல்/ எந்திரவியல்) சங்கம்" தனது 27.04.2022 திகதியக் கடிதம் மூலம் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியினைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை அனைத்துப் பிரதேச தொழிற்சங்கங்களினையும் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு, சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு, மின்கட்டண உயர்வு, ககிதாதிகள் விலை அதிகரிப்பு, போக்குவரத்து கட்டண அதிகரிப்பு, பொருட்களின் பாரிய த்ட்டுப்பாடு உள்ளிட்ட நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல காரணங்களினால் பாரிய இடையூறுகளை எதிர்கொண்டுள்ள எமது தொழிற்சங்க உறுப்பினர்கள் உள்ளடங்கலான அனைத்து பிற அரச சேவை உத்தியோகத்தர்களும் பாரிய நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளதால் இவற்றிலிருந்து விரைவாக மீண்டெழுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்கவேண்டி குறித்த தொழிற்சங்க சுகவீன விடுப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கு முகமாக எமது தொழிற்சங்க உறுப்பினர்களும் இன்று சுகவீன விடுப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சத்திய தரிசனம்



### பகவானிடம் சரணாகதி

**சுவாமியுடனான எனது அனுபவங்கள்**

பின்பு 2008 ஆம் ஆண்டு சுவாமியிடம் புட்டபர்த்திக்கு சென்றேன். சுவாமியை தரிசித்து பின்பு நாடு திரும்ப சென்னைக்கு வந்தேன். மீண்டும் எனக்கு முன்பு ஏற்பட்ட நோயினைவிட அதிகமாக நோய் ஏற்பட்டது. அதன் தாக்கம் அதிகமாக இருந்தது. அதாவது நான் விமான நிலையத்திற்குச் சென்று விமானத்தில் ஏறினேன். அங்கு நான் விமானத்தில் உள்ளிருந்து .பல பிரச்சினைகளை ஏற்படுத்தினேன். விமானக் கதவுகளை காலால் உதைத்துத் தாக்கினேன். பின்பு எனது இரண்டு கைகளை பின்பக்கத்தில் வைத்து விமான ஊழியர்கள், பாதுகாப்புப் பிரிவினர் விமானத்தில் இருந்து இறக்கிவிட்டார்கள். இதனால் விமானம் புறப்படத் தாமதம் ஆகியது. பின்பு என்னை இந்திய தனியார் மனநல மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு என்ன நடந்தது என்று எனக்கு சுயநினைவு இல்லாதிருந்தேன். அங்கு எனக்கு சிகிச்சை அளித்தார்கள். பின்பு நோய் குணமடைந்து நாடு திரும்பினேன். பின்பு இதுவரையும் நோய் ஏற்படவில்லை. ஆனால் 2008 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரைக்கும் மனநிலை குன்றிய நிலையில் இருந்தேன்.

இந்த நிலையில் சீரடி சாயியின் வசனம் எனக்கு நினைவுக்கு வந்தது. **"உலகத்தில் உள்ள நோய்களும் என்னில் தான் உள்ளது. அவற்றுக்கான நிவாரணமும் என்னில் தான் உள்ளது"** என்பது அந்த வசனம் ஆகும். இந்த வசனத்தை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. நான் நமது சுவாமியிடம் எனது மனநோயை தீர்க்கும்படி கேட்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 52

மாகாணம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு 2015 ஆம் ஆண்டில் 11% பங்களிப்பைச் செலுத்தியது. அத்தோடு சேவைத் துறையில் 10%, கைத்தொழிற் துறையில் 10%, விவசாயத் துறையில் 17% பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

வட மேல் மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (57%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற்துறையில் இருந்தும் (29%) மிகுதி விவசாயத்துறையில் இருந்தும் (14%) கிடைக்கப் பெறுகின்றன.

2016 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறை (42%) அதைத்தொடர்ந்து சேவைத்துறை (29%) மற்றும் கைத்தொழிற்துறை (29%) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### வடமேல் மாகாணம் மொத்த சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி மற்றும் எழுத்தறிவு - 2012

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கு (2012) அமைய நாட்டின் சனத்தொகையில் 11.7% அதாவது 2,320,861 பேர் வடமேல் மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாண சனத்தொகையில் 68% அதாவது 1,618,465 பேர் குருநாகல் மாவட்டத்திலும் 32% அதாவது 762,396 பேர் புத்தளம் மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

மாகாணத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 317 ஆகும். மாகாணத்தில் 10 வயதுக்கு மேற்பட்டவர்களின் எழுத்தறிவு (அர்த்தமுள்ள சிறு குறிப்பொன்றை எழுத முடியுமான ஆட்களின் எண்ணிக்கை) 96.3% ஆகும்.

**சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கு (2012) அமைய நாட்டின் சனத்தொகையில் 11.7% வடமேல் மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாண சனத்தொகையில் 68% குருநாகல் மாவட்டத்திலும் 32% புத்தளம் மாவட்டத்திலும் வசிக்கின்றனர். மாகாணத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 317 ஆகும்.**

### வடமேல் மாகாணம் பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாறுபட்டுள்ள விதம் -2012

சனத்தொகை ஆண் பெண் பால்நிலைக்கமைய மாகாணத்தின்,அதன் மாவட்டங்களின் மற்றும் முழுநாட்டில் பரந்து காணப்படுகின்ற முறை 2.1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் நிலைமைக்கு சமமான விதத்தில் மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களிலும் பெண்களின் சனத்தொகை ஆண்களின் சனத்தொகையை விட அதிகமாகவுள்ள விதத்தை அட்டவணை மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

கையில் உள்ள சிங்களவர்கள் சனத்தொகையில் 13.4% வடமேல் மாகாணத்தில் வசிக்கின்றனர். இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களில் 13.9 வீதமும் வடமேல் மாகாணத்தில் வாழ்கின்றனர்.

அட்டவணை 2.1: ஆண் பெண் பால் நிலைக்கமைய சனத்தொகை வேறுபாடு

வட மேல் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| குருணாகல் | 1,618,465 | 100 | 777,201 | 48.0 | 841,264 | 52.0 |
| புத்தளம் | 762,396 | 100 | 368,971 | 48.4 | 393,425 | 51.6 |
| வடமேல் மாகாணம் | 2,380,861 | 100 | 1,146,172 | 48.1 | 1,234,689 | 51.9 |
| இலங்கை | 20,359,439 | 100 | 9,856,634 | 48.4 | 10,502,805 | 51.6 |

### வடமேல் மாகாணம் சனத்தொகை பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம்-2012

சனத்தொகை பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளது. வடமேல் மாகாண சனத்தொகையில் பெரும்பான்மை மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கின்றனர். அது 95.5% ஆகும். இலங்கையின் நகர்ப்புறத்தில் வாழும் மொத்த சனத்தொகையில் 2.6 வீதத்தினர் மட்டும் வடமேல் மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இனப்பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாடு இலங்கை மற்றும் வடமேல் மாகாணத்துடனான ஒப்பீடு, அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

### வடமேல் மாகாணம் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

சமயங்களுக்கமைய சனத்தொகை வேறுபடும் விதம் அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது. வடமேல் மாகாணத்தின் பெரும்பான்மையினர் பௌத்தர்கள் 74 சதவீதம் என்பதோடு, அதற்

அட்டவணை 2.2: பிரிவுகளுக்கமைய சனத்தொகை வேறுபாடு - வட மேல் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | நகர | | கிராமிய | | தோட்ட | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| குருணாகல் | 1,618,465 | 30,342 | 1.9 | 1,580,556 | 97.7 | 7,567 | 0.5 |
| புத்தளம் | 762,396 | 66,952 | 8.8 | 693,844 | 91.0 | 1,600 | 0.2 |
| வடமேல் மாகாணம் | 2,380,861 | 97,294 | 4.1 | 2,274,400 | 95.5 | 9,167 | 0.4 |
| இலங்கை | 20,359,439 | 3,704,470 | 18.2 | 15,753,322 | 77.4 | 901,647 | 4.4 |

### வடமேல் மாகாணம் இனங்கள் அடிப்படையில் சனத்தொகை மாற்றம் - 2012

வடமேல் மாகாணத்தின் சனத்தொகையில் பெரும்பான்மையினர் சிங்கள இனத்தவர்கள் 85.7 வீதமாகும். அதற்கடுத்த கூடிய இனப்பிரிவினராக இலங்கை முஸ்லிம்கள் 11 சதவீதத்தினர் காணப்படுவதோடு, அதற்கடுத்த இனப்பிரிவினராக இலங்கைத் தமிழர்கள் 3.0 சதவீதமும் ஏனைய இனப்பிரிவினர்,இந்தியர்,பறங்கியர், மலாயர் மற்றும் இலங்கைச் செட்டியார் ஆகிய இனப்பிரிவு 0.3 சதவீதமும் ஆகும். இலங்

கடுத்த சமய மக்கள் பிரிவினர் ரோமன் கத்தோலிக்க 11.9% மக்கள் பிரிவினராகும்.

அதற்கடுத்ததாக இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றும் 11.3 சதவீதமான மக்கள் பிரிவினரும், இந்து மற்றும் ஏனைய சமயத்தவர்கள் 2.8 சதவீதமும் இங்கு வாழ்கின்றனர்.

முழு நாட்டின் பௌத்த மக்களில் 12.3 வீதமும், ரோமன் கத்தோலிக்க மக்களில் 22.5 வீதமும், இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றும் மக்களில் 13.7 வீதமும் இம்மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அட்டவணை 2.3: இனப் பிரிவுகளுக்கமைய சனத்தொகை வீத வேறுபாடு

வட மேல் மாகாணம்

| பிரதேசம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | வேறு |
|---|---|---|---|---|---|
| குருணாகல் | 91.4 | 1.1 | 0.2 | 7.1 | 0.2 |
| புத்தளம் | 73.6 | 6.3 | 0.3 | 19.3 | 0.5 |
| வடமேல் மாகாணம் | 85.7 | 2.8 | 0.2 | 11.0 | 0.3 |
| இலங்கை | 74.9 | 11.1 | 4.1 | 9.3 | 0.5 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ச்சியாக...

முந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இளவாலையில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதில் கருணாகரன் அருட்சாந்தன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

தொலைபேசியில் ஆயுதப் போர் வீடியோ கேம் (பப்ஜி) விளையாடுவது இளைஞனின் அண்மைக்கால நடவடிக்கையாக இருந்துள்ளது.

அதில் மூழ்கிப்போன அவர் நேற்று காலை அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று உறவினர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

இளைஞனின் சடலத்தில் காதுகளில் மாட்டிய ஹெட்செட் மற்றும் பொக்கெட்டில் அவரது தொலைபேசி என்பன காணப்பட்டுள்ளது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை வீடியோ கேம் விளையாடிய பல இளைஞர்கள் இந்தியாவில் உயிர்மாய்த்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,33,104)

## வழமைபோல...

இன்றைய தினம்தமது பேருந்துகள்வழமை போல சேவையில் ஈடுபடும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை போக்குவரத்து சபை தொழிற்சங்கத்தினர், வழமை போல இன்று சேவையில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இ.போ.ச தலைவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## இடைக்கால அரசு...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரச தலைவர் பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும் வரை இடைக்கால அரசில் இணையத் தயாரில்லை என சஜித் பிரேமதாஸ ஏற்கெனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

எனினும், புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் இடைக்கால அரசு அமைப்பதற்கு தெற்கு அரசியலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் சஜித்திடம் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-7)

## வங்கிகளும்...

பல தொழிற்சங்கங்களும் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

வேலைநிறுத்தப் போராட்டம் காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கியும் வேலைநிறுத்தம் காரணமாக அதன் சேவைகளை கட்டுப்படுத்தும் முடிவை அறிவித்துள்ளது. (ம-7)

## யாழ்.பல்கலைக்...

மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது, யூ. எஸ்.எயிட் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும் என்ற முதுமாணிக் கற்கைநெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும் யூ.எஸ்.எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், யூ.எஸ்.எயிட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## நாடு இன்று...

பல அரச, தனியார் மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட சுமார் 1,000 தொழிற்சங்கங்கள் இன்றைய தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

துறைமுகம், தொடருந்து, சில சுகாதார சேவை சங்கங்கள், ஆசிரிய, அதிபர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினர் தங்களது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்றைய போராட்டத்துக்கு தமது தரப்பினரும் ஆதரவு வழங்கவுள்ளதாக ஆசிரிய அதிபர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக இலங்கை கல்வி சமூக சம்மேளனத்தின் செயலாளர் ஆர்.சங்கரமணிவண்ணன் தெரிவித்தார்.

அத்துடன் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்ற போதிலும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதில்லையென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக அதன் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாடு முழுவதுமுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் இன்றைய தினம் மரக்கறி விநியோகம் இடம்பெறமாட்டாது என அகில இலங்கை ஒன்றிணைந்த பொருளாதார மத்திய நிலைய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அந்தக் கூட்டமைப்பின் தலைவர் அருண சாந்த இதனை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இன்றைய போராட்டம் காரணமாக, மெனிங் சந்தை மற்றும் பல பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை அனுப்ப வேண்டாமென விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய போராட்ட நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் வகையில், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கறுப்புப் பட்டி அணிந்து, தொழிலில் ஈடுபடுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

(ம-7)

## 'உங்...

அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத்தீவு மிக அண்மைய நாட்களில் மிகப் பெரிய நெருக்கடி நிலையை சந்தித்து வருகின்றது. தென்னிலங்கை சிங்கள மக்கள் இந்த நெருக்கடிக்கு எதிராக மாபெரும் எழுச்சியுடன் போராடி வருகின்றனர்.

தென்னிலங்கை மக்களின் இந்த எழுச்சியின் நியாயத்தைகடந்தகாலங்களில்பேரவலத்தை சந்தித்த இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களாகிய நாங்கள் புரிந்து கொள்கின்றோம். அதனை மதிக்கின்றோம்.

இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணம் தமிழ் மக்கள் மீது காலங்காலமாக கட்டவிழ்த்து விடப்பட்ட பாரிய அடக்குமுறைகளாகும்.

எனினும் அந்த அடக்குமுறை இது வரை பாராமுகமாகவே தொடர்வது வேதனைக்குரியது.

இத்தருணத்தில் சிங்கள மக்கள் தமிழ் மக்களாகிய எங்களது வலிகளையும் நியாயங்களையும் புரிந்து கொள்ளுமாறு வலியுறுத்தி நிற்கின்றோம்.

உங்களைப் புரிந்து கொள்கின்றோம். எங்களைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதே தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக இருக்கின்றது என்பதை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

சாவகச்சேரியில் மீண்டும் பேரதிர்ஷ்டம்
23.04.2022 அன்று சீட்டிழுக்கப்பட்ட 'சுப்ருக' சீட்டிழுப்பின் மூலம் சாவகச்சேரி வாசி ஒருவருக்கு பத்து இலட்சம் ரூபாய் பரிசு கிடைத்துள்ளது. இந்த டிக்கெட் சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. (C-4257)
தொ.பே.இல:- 077 357 8224
விற்பனை முகவர்:- க.பிரதாஸ்
D/L/B 9091 சாவகச்சேரி

தன நிதானய
திகதி - 2022.04.27
சீட்டிழுப்பு இலக்கம் - 775
Z 26 50 63 73

மஹஜன சம்பத
திகதி 2022/04/27
சீட்டிழுப்பு இலக்கம் 4745
R 5 7 5 4 6 9

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 054
09 10 13 52

மெகா பவர்
திகதி 27/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1093
N 11 03 35 56 79

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1239
மேடம் 7 2 2 6 4 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1722 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022/04/27 தினம் புதன்
T 20 27 43 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 58,805,983/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.27
சீட்டிழுப்பு இல: 3883
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,002,560/-
வெற்றி இலக்கங்கள் 01 09 40 63 Y

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,201,037/-
திகதி 2022/04/27
வெற்றி வாரம் 3434
வெற்றி இலக்கங்கள் 05 25 38 55 துலாம்
வர்ணம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,476,480/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 14 06 48 61 67
சீட்டிழுப்பு வாரம் 898
2022.04.27 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 233,417,467/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1831
சீட்டிழுப்பு திகதி 2022/04/27
வெற்றி இலக்கங்கள் 26 31 45 52 H
எதிர்வரும் சுப்பர் பரிசுப்போதி ரூ. 33,717,904/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.27
சீட்டிழுப்பு இல: 1548
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,922,520/-
வெற்றி இலக்கங்கள் 25 28 45 62 G

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணை ஊடாகவே நாட்டினை பொறுப்பேற்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மக்கள் ஆணையின் ஊடாகவே நாட்டின் பொறுப்பை ஏற்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மாவனல்லையில் நேற்று ஆரம்பமான எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைக்கு உடனடித் தீர்வைக்கோரி கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் எதிர்ப்புப் பேரணி நேற்று கலிகமுவவை வந்தடைந்தது.

இரண்டாவது நாளான நேற்று காலை மாவனல்லையில் இருந்து இந்த எதிர்ப்பு பேரணி ஆரம்பமானது.

இதேவேளை, தற்போதைய நிலைமைக்கு எதிராக கொழும்பு காலிமுகத் திடலில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் 19 ஆவது நாளாகவும் நேற்று இடம்பெற்று வருகின்றது.

69 இலட்சம் வாக்குகளைக் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தில் 145 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சகிதம் அதிகாரங்கள் மற்றும் 2/3 பெரும்பான்மையை கொடுத்து உருவாக்கியது அரசாங்கம். நாடு வீழ்ந்துள்ள நேரத்தில் அந்த மோசடியாளர்களுடன் எமக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

(ம-7)


10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (C-4250)

WORLD EDUCATION CONSUDTANCY

0779265447 / 0217200989

மணமகள் தேவை

வடமராட்சி, கௌரவ 70 ஆம் ஆண்டு பிறந்த திருமணமாகாத சுயதொழில் புரியும் லக்கினத்தில் சூரியன், செவ்வாய் உடைய கிரகபாவம் கூடிய மணமகனுக்கு 40 வயதிற்கு மேற்பட்ட மணமகள் தேவை. (11189)

074 244 7036

# ACI கல்வி நிலையம்

(கொக்குவில் சந்தி)

தொடர் கருத்தரங்கு

ஆரம்பம் - 29.04.2022 (வெள்ளி 3 pm)

வணிகமும் கணக்கீட்டு கல்வியும்

வி. தமிழ்ஈசன்

(முன்னணி கணக்கீட்டுத்துறை ஆசிரியர்)

- முழுமையான பாடப் பரப்பினை உள்ளடக்கிய அலகு ரீதியான மீட்டல்.
- 15 மணித்தியாலங்கள் (5 நாட்கள்) நடைபெறும்.
- கட்டணம் : 500/=
- இம்முறை O/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு.

(11187)

அனுமதிகளுக்கு - 076 806 6960

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி





விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS (C-4249)

எமது கிளைகள்

- -15'000/-
- -20'000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

0777-068-777

A/L PHYSICS

குழு மற்றும் தனி வகுப்புக்கள்

இதுவரை தவறவிட்ட அலகுகள் or புதிய அலகுகளை குறிப்பிட்ட காலத்தில் Past Paper உடன் கற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு (11190)

076 603 4895

T.U. Jiinthu

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 87 பரப்பு காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- வசாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி)1 Km தூரம்.
- வசாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்.
- அச்சுவேலி – தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்.

(11192)

074 043 6599, 074 043 6375

ஊர்க்கோழி குஞ்சுகள்

1 நாள் 100/=

வான்கோழி 1 நாள் 300/=

வெள்ளடியன் 1 நாள் 300/=

(11191)

077 332 2433


# மரண அறிவித்தல்

## திருமதி வசந்தா சத்தியபாலன்

(ஓய்வுபெற்ற உப அதிபர் - யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி)



பிறப்பு : 24.10.1964

இறப்பு : 27.04.2022

இல.882, பருத்தித்துறை வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா சத்தியபாலன் அவர்கள் நேற்று (27.04.2022) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் முத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராஜா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியபாலன் (ஓய்வுநிலை உப அதிபர் - யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சௌஜன்யன் (மென்பொருள் பொறியியலாளர்), ஷாகரி (SLLA மாணவி, நூலகமும் தகவல் விஞ்ஞானமும்) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. மாதங்கியின் (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) அன்பு மாமியாரும் ஜெயந்தி (ஆசிரியை - யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ரவீந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பவானி, சீதா மற்றும் சத்தியமூர்த்தி (வைத்தியர்), சத்தியநாதன் (கனடா), தியாகராஜா, சிவபாதம், ரூபராணி, சாந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் வத்சலா (லண்டன்), வனிதா (லண்டன்), வாசுகி (கனடா), நிசங்கன் (விரிவுரையாளர் - உயர் தொழிநுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் Dr. சத்தியரூபன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), சாருஜன் (விரிவுரையாளர் - விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சித்தியும் நிஷாதரி (மாணவி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெனிஷன் (சுவிஸ் - Automation Technician), மிருதுளா (Dentist - சுவிஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் சயிக்காவின் (Prophylaxis Assistant, சுவிஸ்) மாமியும் டியாராவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4259)

077 007 2153 (கணவர்), 077 533 3884 (மகன்), 0041798833312 (சகோதரி)

தகவல் :- [illegible]


NORTH LANKA IIT CITY CAMPUS

UCEM

APPROVED CENTER OF CENTRAL AMERICAN BUSINESS UNIVERSITY - COSTA RICA

APPROVED BY UGC AND UNESCO

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

B.Ed - 3 Years

தகைமை: A/L 3 Passes

B.Ed [ Top Up] 1 Year

தகைமை: Training College / College of Education பூர்த்தி செய்த ஆசிரியர்கள்

M.Ed - 1 Year

தகைமை: B.Ed / PGDE

மேற்படி கற்கைநெறிகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. கற்கைநெறியை தொடர விரும்புவோர் உடனடியாக பதிவு செய்து பங்குகொள்ளவும்.

(C-4255)

தொடர்புகளுக்கு : North lanka IIT City Campus, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.

T.P - 0767504535 / 0778849677 / 0765688156


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.